

**வி**தி விதி என்று பேசி
மதியை மாய்க்கும்
ஏடுகள்
நமக்குத் தேவையில்லை;
மதியைப் பெருக்கி
விதியை வீழ்த்தும்
அறிவு நூல்களே
நமக்குத் தேவை.

**- அறிஞர் அண்ணா**



கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு ஆய்வு பணிகளை மேற்கொள்ள வந்த சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையில் அமைக்கப்படும் பாலத்தை பார்வையிட்டார். பின்னர் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மனோ தங்கராஜ் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி., ஹெலன் டேவிட்சன், குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மேயர் மகேஷ், முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ் ராஜன், துணை மேயர் மேரி பிரின்சிலதா, மாநகர செயலாளர் ஆனந்த் மற்றும் சுற்றுலாத்துறை அதிகாரிகள், பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக அதிகாரிகள், திருவள்ளுவர் நினைவுப் பாறை ஒப்பந்ததாரர் ஒன்றிய செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### எஸ் .புதூர் ஒன்றியத்தில்

# ரூ.26 லட்சத்தில் மாணவர்களுக்கு முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சிவகங்கை, நவ. 13 - சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் புழுதிப்பட்டி, கரிசல் பட்டி, எஸ்.புதூர் முசுண்டபட்டி, கட்டுகுடிபட்டி, உலகம்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள அரசு மேல் நிலைப் பள்ளியில் 525 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 25 லட்சத்து 32 ஆயிரத்து மதிப்பிலான முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கி சிறப்புரையாற்றினார். அதனை தொடர்ந்து 2023 .24 இல் எஸ்.எஸ். எல்.சி.பிளஸ் 2 தேர்வில் முதல் மூன்று இடம் எடுத்த மாணவிகளுக்கு மாணவர்களுக்கு தலா ரூபாய் 10,000 வீதம் ரூபாய் 30 ஆயிரமும், இரண்டாவது இடம்பெற்ற மாணவிகளுக்கு தலா ரூபாய் 5000வீதம் ரூபாய் 15 ஆயிரமும், மூன்றாம் இடம் பெற்ற மாணவிகளுக்கு தலா ரூபாய் 3000 விதம் 9000 ஆகமொத்தம் ரூபாய் 54 ஆயிரத்தை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சொந்த நிதியிலிருந்து வழங்கி பாராட்டினார். மேலும் பள்ளியில் ரூபாய் 10 ஆயிரம்கொடுத்து புரவலராக சேர்ந்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் செந்தில்குமார், வட்டாட்சியர் பரிமளா, ஒன்றிய ஆணையாளர் செழியன் , எஸ்.புதூர் ஒன்றிய செயலாளர் செல்வராஜ் மற்றும் ஆசிரியர், ஆசிரியைகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



**இலக்கியம்:**
பண்பாட்டைப்
பிரதிபலிக்கும்
கண்ணாடி!
**இலக்கணம்:**
அந்த கண்ணாடியின்
நான்கு புறமும்
போடப்படும் சட்டம்!

**- முத்தமிழறிஞர் கலைஞர்**

### முடிவின்றித் தொடரும் தமிழக மீனவர்களின்

# கடல் துயரங்களுக்கு ஆளும் ஒன்றிய அரசு தீர்வு காண்பது எப்போது?

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, நவ. 13 - "முடிவின்றித் தொடரும் தமிழக மீனவர்களின் கடல் துயரங்களுக்கு ஆளும் ஒன்றிய அரசு எப்போது தீர்வு காணப் போகிறது" என்று தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்து 12.11.2024 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ள தாவது:



தினகரன்
நவம்பர் 12, 2024 செவ்வாய்க்கிழமை
தீர்வு எப்போது?
இலங்கை கடற்படையினரின் அத்துமீறல், அட்டூழியங்களால் தமிழக மீனவர்கள் படும் துயரங்கள் முடிவின்றி தொடர்கதையாகத் தொடர்கின்றன. கடந்த 10 ஆண்டுகள் வரை எல்லை தாண்டி மீன்பிடித்தால் மீனவர்கள், அவர்களது படகுகளை சிறைபிடிக்கும் சம்பவங்கள் மட்டுமே நடந்தன. பின்னர் விசாரணை நடத்தப்பட்டு, விடுதலை செய்வது என இருந்தது. பாஜ ஆட்சிப் பொறுப்பேற்ற நாளில் இருந்து நிலைமை தலைகீழாக மாறியது. தமிழக மீனவர்களின் பல லட்சம் மதிப்புள்ள படகுகளை அரசுடமை ஆக்கியது இலங்கை அரசு. கைது செய்யப்படும் மீனவர்களுக்கு கடுமையான

இலங்கை கடற்படையினரின் அத்துமீறல், அட்டூழியங்களால் தமிழக மீனவர்கள் படும் துயரங்கள் முடிவின்றி தொடர்கதையாகத் தொடர்கின்றன. கடந்த 10 ஆண்டுகள் வரை எல்லை தாண்டி மீன்பிடித்தால் மீனவர்கள், அவர்களது படகுகளை சிறைபிடிக்கும் சம்பவங்கள் மட்டுமே நடந்தன. பின்னர் விசாரணை நடத்தப்பட்டு, விடுதலை செய்வது என இருந்தது. பாஜ ஆட்சிப் பொறுப்பேற்ற நாளில் இருந்து நிலைமை தலைகீழாக மாறியது. தமிழக மீனவர்களின் பல லட்சம் மதிப்புள்ள படகுகளை அரசுடமை ஆக்கியது இலங்கை அரசு. கைது செய்யப்படும் மீனவர்களுக்கு கடுமையான சிறைத் தண்டனையும், லட்சக்கணக்கில் அபராதமும் விதிக்கும் புதிய நடைமுறையை இலங்கை கொண்டு வந்தது.

எல்லை தாண்டியதாக இலங்கை கடற்படை நமது மீனவர்களை விரட்டியடிப்பது, படகுகள், வலைகளை சேதப்படுத்துவது, மீன்களை அள்ளிச் செல்வது, கைது செய்து விசாரணை என்ற பெயரில் சித்ரவதை செய்வது என தொடர்ந்து அண்டை நாடான இலங்கை அட்டூழியம் செய்து வருகிறது. ஒப்பீட்டளவில், கடந்த காலங்களை விடவும், மத்தியில் பாஜ அரசு பொறுப்பேற்றப் பிறகே தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலும், சிறைபிடிப்புகளும் அதிகரித்திருக்கிறது.

இலங்கை அரசு கடந்த 2 ஆண்டுகளாக கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. அப்போது, ரூ.32 ஆயிரம் கோடி நிதியை இலங்கைக்கு வாரி வழங்கியது ஒன்றிய அரசு. தமிழகம் உள்ளிட்ட எதிர்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களின் அடிப்படை, அத்தியாவசியப் பணிகளுக்கே போதிய நிதி ஒதுக்கப்படாத நிலையில், இலங்கைக்கு இவ்வளவு நிதி தேவை தானா என விமர்சனங்கள் எழுந்தன. நெருக்கடியான காலகட்டத்தில் இந்தியாவிடம் இருந்து உதவி கிடைத்தப் பிறகாவது, நன்றியுணர்வுடன் நமது மீனவர்கள் மீதான தாக்குதல் நிறுத்த ப்பட்டதா... என்றால், இல்லை. அது எப்போதும் போல தொடர்கிறது. இதையெல்லாம், கண்டுக்காமல் ஒன்றிய அரசு நீலிக் கண்ணீர் வடிப்பதாகவே மீனவர்களின் குடும்பத்தினர் குற்றம் சாட்டுகின்றனர்.

'நாங்கள் பொறுப்பேற்ற பிறகு தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை கைவைக்காது...' என பத்தாண்டுகளுக்கு முன் பாரதிய ஜனதா கட்சியினர் வழங்கிய வாக்குறுதிகள்... காற்றோடு போய்விட்டது. இலங்கை கடற்படையின் தாக்குதல்களையும், சிறைபிடிப்புகளையும் ஒன்றிய அரசு மவுனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. நவம்பர் 9ம் தேதி கடலுக்குச் சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. இதற்கும் சரி, இதற்கு முன்பு நமது மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்ட போதும் சரி... ஒன்றிய அரசின் எதிர்வினைகள், நடவடிக்கைகள் கடும் அதிருப்தியளிப்பதாகவே இருக்கிறது.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணும் படி பிரதமர் மோடி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடியாகவும், கடிதங்கள் வாயிலாகவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். ஆனாலும், ஒன்றிய அரசிடம் கனத்த மவுனமே தொடர்கிறது. 2019ல் நீலப்புரட்சி என்ற பெயரில் ஆழ்கடல் மீன்பிடிப்பு திட்டத்தை அறிவித்து மீனவர்களை நஷ்டத்தில் ஆழ்த்தியது. முடிவின்றித் தொடரும் தமிழக மீனவர்களின் கடல் துயரங்களுக்கு ஆளும் ஒன்றிய அரசு எப்போது தீர்வு காணப்போகிறது... என்ற கேள்வி, கடலோரங்களில் வசிக்கும் அப்பாவி மீனவக் குடும்பங்களில் அலை போல அன்றாடம் எதிரொலிக்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், 18.11.2024 - திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில், எனது தலைமையில், துணைத் தலைவர்கள் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம் - செயலாளர்கள் மா.உமாபதி, அர.திருவிடம், இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், என்.தில்லைசெல்வம் - துணைச் செயலாளர்கள் சி.வீராகணேசன், கவிஞர் நன்மாறன், எழில்மாறன், மீனா ஜெயக்குமார், சி.கோபி, ஜாகிர் உசேன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

பொருள்: 1. தமிழ்நாடு துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்தநாள்

2. முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா - பள்ளி மாணவர்களுக்கான கலைஞர் வசனம், கவிதைகள் ஒப்புவித்தல் மாநில அளவிலான போட்டி.

3. கழக ஆக்கப் பணிகள் - குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 12.11.2024

**வாகை சந்திரசேகர்**
தலைவர்,
கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை

### தி.மு.க. மருத்துவ அணி

# மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மருத்துவ அணிச் செயலாளர் - மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, நவ.13 - கழக மருத்துவ அணியின் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் இன்று (13.11.2024 புதன்கிழமை) மாலை 7.00 மணி அளவில் இணையம் வழியாக (Google Meet), மருத்துவ அணி மாநிலத் தலைவர் மருத்துவர் கனிமொழி என்.வி.என். சோமு எம்.பி. தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: துணை முதலமைச்சர் கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள். மருத்துவ அணி வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு அவ்வறிக்கையில் மருத்துவ அணியின் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

சென்னை, நவ.13 - கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி.யின் அறிக்கை வருமாறு:

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள், மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 16-11-2024 சனிக்கிழமை காலை 10 மணியளவில், சென்னை, தேனாம்பேட்டை, அன்பகம், அண்ணா மன்றத்தில் எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் நடைபெறும்.

பொருள் : கழக இளைஞர் அணிச் செயலாளர் பிறந்த நாள் விழா, 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல்

இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் தலைமைக் கழக வழக்கறிஞர்கள், மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக சட்டத் துறைச் செயலாளர் என். ஆர். இளங்கோ தெரிவித் துள்ளார்.

### தஞ்சைப் பல்கலைக் கழக சிண்டிகேட் உறுப்பினராக

# வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் தேர்வு!

## செம்மொழி இளம் அறிஞர் விருது பெற்றவர்!

சென்னை, நவ. 13 - பச்சையப்பன் கல்லூரி மேனாள் தமிழ் த்துறைத் தலைவரும் கந்தசாமி நாயுடு கல்லூரி முதல்வ ரும் ஆகிய பெருங் கவிக்கோ வா.மு.சே. சேதுராமனின் புதல்வராகிய வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர் தஞ்சாவூர் தமிழ் ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராக (சிண்டிகேட்)ஒருமனதாக தேர்ந்



தெடுக்கப்பட்டுள்ளார்.

அவர் முதுகலை த்தமிழில் பல்கலைக்கழக முதல் மாணக்கராகத் தேர்ச்சி பெற்று இளம் முனைவர் பட்டங்களை சென்னைப் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். 15க்கும் மேற்பட்ட முனைவர் பட்ட மாணவர்களுக்கு ஆய்வு நெறியாளராக விளங்கியவர் 70க்கும் மேற்பட்ட இளம் முனைவர் மாணவர்களுக்கும் ஆய்வு நெறியாளராக விளங்கி யவர் 35 நூல்களை இயற்றியுள்ளார்.

அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், சிங்கப்பூர், கனடா போன்ற பல்வேறு நாடுகளுக்கு சென்று ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார் இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களும் தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் ஆய்வு கட்டுரைகள் வழங்கியவர் 120க்கும் மேற்பட்ட முனைவர் பட்ட மாணவர்களுக்கு புறத் தேர்வாளராகஇருந்து முனைவர் பட்டம் வழங்கியவர்.

செம்மொழி இளம் அறிஞர் விருதினை குடியரசுத் தலைவரிடமிருந்து பெற்ற பெருமைக்குரியவர்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி திமுக கட்சி அலுவலகத்தில் பி எல் ஏ2 பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக ஆண்டிபட்டிதொகுதி பொறுப்பாளர் முத்துக்குமார் கலந்து கொண்டார்.முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆசையன்,மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் ராமசாமி, கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞரணி மண்டலம் 9க்குட்பட்ட மாவட்ட, மாநகர நிர்வாகிகளுக்கான சமூகவலைதளப் பயிற்சி முகாமில் மண்டல பொறுப்பாளரும், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளருமான இன்பா ஏ.என்.ரகு பேசினார். உடன் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் விமல், இளங்கோவன், சவுந்திரராஜன், வெற்றிச்செல்வன், மருதுராஜா, அய்யப்பன், அன்புச்செல்வன், ஆதவன் அதியமான், காளிதாஸ், ஜெகதீஷ் மற்றும் சமூகவலைதள பயிற்சியாளர்கள் சூரிய கிருஷ்ணமூர்த்தி, மாறன், தினேஷ்கண்ணன் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் திரளானோர் பங்கேற்றனர்.